2018-ம் வருடம் பிப்ரவரி மாதம் 2-ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.30மணிக்கு நடைபெற்ற கூட்ட நடவடிக்கையின் உண்மைநகல்:

முன்னிலை: திரு.எல்.குமார்.பி.இ.
தனி அலுவலர், ஆம்பூர் நகராட்சி.

----------

1. வார்டு வரையறை ஆணையத்தால் தெரிவிக்கப்பட்ட வழிகாட்டுதல்படி ஆம்பூர் நகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ள இயற்கை அமைப்பினை கருத்தில் கொண்டும் தெருக்கள் / நகராட்சி பகுதியில் இயல்பான அமைப்பினை கருத்தில் கொண்டும் வார்டு மறுவரையறைக்கான வரைவு கருத்துரு தயாரித்து வரைபடங்கள், படிவங்கள் மற்றும் சான்றுகள் உரிய வழிமுறையாக ஆணையத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்பட்டு வரைவு கருத்துரு மறுவரையறை ஆணையத்தின் பரிசீலினைக்குப்பின் பொதுமக்கள், அரசியல் கட்சிகள் மற்றும் பல்வேறு அமைப்புகளின் ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் தெரிவிக்க கோரி தினசரி நாளிதழ், நகராட்சி மற்றும் அரசு அலுவலகங்களின் அறிவிப்பு பலகைகளில் விளம்பரம் செய்யப்பட்டது. இதனை தொடர்ந்து பல்வேறு கருத்துருக்களை குறிப்பிட்டு இந்நகராட்சியிலும், மாவட்ட ஆட்சித் தலைவரிடமும் மற்றும் மறுவரையறை ஆணையத்திலும் நேரடியாகவும் / தபால் மூலமும் / மின்னஞ்சல் வழியாகவும் 81_மனுக்கள் வரப்பெற்றது. மேற்கண்டவாறு வரப்பெற்ற மனுக்கள் பரிசீலினை செய்யப்பட்டு மறு ஆய்வு அலுவலர் அவர்களின் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு மாவட்ட மறுவரையறை அலுவலர் அவர்களின் பரிந்துரை பெறப்பட்டுள்ளது. இதன்படி இறுதி வரைவு வார்டு மறுவரையறை கருத்துரு தயார் செய்யப்பட்டுள்ளதனை பார்வைக்கு வைக்கப்படுவதுடன், இக்கருத்துருவினை மறுவரையறை ஆணையத்திற்கு உரிய வழிமுறையாக சமர்ப்பிக்கவும் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கலாம்.

ந.க.எண். 1312 /2017/எப்1

தீர்மானஎண்.293 அங்கீகரிக்கப்பட்டது.

2. ஆம்பூர் நகராட்சி பகுதியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ்1400 தனிநபர் கழிப்பிடம் கட்டவும் 2015–2016ம் ஆண்டில் 4 எண்ணிக்கை சமுதாய கழிப்பிடம் கட்டவும் 2016–17ல் 1 எண்ணிக்கை சமுதாய கழிப்பிடம் கட்டவும் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. இதில் 1380 தனிநபர் கழிப்பிடங்கள் கட்டப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள் 20 எண்ணிக்கை பணி நடைபெற்று முடிவுறும் தருவாயில் உள்ளது. 2015–2016ம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட 4 எண்ணிக்கை சமுதாய கழிப்பிடத்தில் 3 எண்ணிக்கை முடிக்கப்பட்டுள்ளது. 1 எண்ணிக்கை 2வது தார்வழி பகுதிக்கு ஒதுக்கப்பட்டட சமுதாய

கழிப்பிடமும் 2016–17ல் ஒதுக்கப்ப்ட்ட 1 எண்ணிக்கை சமுதாய கழிப்பிடமும் போதிய இட வசதி இல்லாததால் கட்டப்படவில்லை. மேலும் அப்பகுதிகளில் தனிநபர் கழிப்பிடம் கட்டப்பட்டு விட்டதால் சமுதாய கழிப்பிடம் தேவைப்படவில்லை. எனவே 2 எண்ணிக்கை சமுதாய கழிப்பிடம் தேவையில்லை எனவும் மேற்கண்ட 2 எண்ணிக்கை சமுதாய கழிப்பிடங்களை திரும்ப ஒப்படைக்க அங்கீகாரம் கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு – அங்கீகாரம் வழங்கலாம்.

ந.க.எண்.1193/2016/இ1

தீர்மானஎண்.294 அங்கீகரிக்கப்பட்டது.

3. இந் நகராட்சியில் வருவாய் நிதியின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட கீழ் குறிப்பிட்டுள்ள பணிக்கு 28.12.2017ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப் புள்ளிகளின் விவரம் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை (ருபாய் லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திரு/திருமதி | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | இந் நகராட்சி அலுவலக வளாகத்தில் தரைதளத்தில் உள்ள பழைய கழிவறைகள் மற்றும் சிறுநீர் கழிவடங்களை புதுப்பித்து புனரமைத்தல்,கிழக்குபுறமாக உள்ள பழைய வலுவிழந்த கூரையினை அப்புறப்படுத்தி நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடமாக மாற்றி அமைத்தல். | 2.75 | 1.ஜி.ரவிசந்திரன்<br><br>2. எம்.உதயகுமார் | 0.05% மதிப்பீட்டைவிட குறைவு<br>0.90% மதிப்பீட்டைவிட அதிகம் |

அலுவலகக்குறிப்பு: மேற்குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.ஜி.பிரபாகரன் ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள குறைவான ஒப்பந்தப்புள்ளியை அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.934/2017/இ1

தீர்மானஎண்.295 அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

4. இந் நகராட்சிக்கு சொந்தமான சம்பங்கி அங்காடி முதல் தளத்தில் உள்ள கடைஎண்.3ஐ நகராட்சிக்கு வருவாய் ஈட்டும் பொருட்டு குத்தகைக்குவிட 24.01.2018ம் தேதியன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் பொது ஏலம் கோர எவரும் முன்வரவில்லை. ஒப்பந்தப் புள்ளிகள் மட்டும் வரப்பெற்றதை பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர் பெயர் (ம) முகவரி திருவாளர்கள் | மாத வாடகைத் தொகை ரூ. |
|---|---|---|
| 1 | எஸ்.பிரேம்குமார்,<br>25, அன்னைவாசுகி தெரு,<br>கஸ்பா.பி., ஆம்பூர். | 2000/- |
| 2 | ஜி.பிரபாகரன்,<br>ஒப்பந்ததாரர்,<br>ஆம்பூர். | 1900/- |

அலுவலகக்குறிப்பு: அ. நகரமன்ற தீர்மான எண்.364, நாள் 26.02.2016ல் மேற்படி கடையினை குத்தகைக்கு விடவும், பொது ஏலம் விடவும், மேற்படி கடைக்கு அருகாமையில் உள்ள மாத வாடகை தொகையை கணக்கில் கொண்டு மேற்படி கடைக்கு அரசாங்க மதிப்பு தொகையாக ரூ.2000/-ஐ நிர்ணயம் செய்ய தீர்மானிக்கலாம்.
ஆ.வரிசைஎண்.1ல் கண்டுள்ள திரு.எஸ்.பிரேம்குமார், கஸ்பா.பி, ஆம்பூர் என்பவர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி ஒரு மாதத்திற்கான வாடகை தொகை ரூ.2000/-க்கு கோரியுள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.402/2016/அ1
தீர்மானஎண்.296 அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

5. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மேடான மற்றும் பைப்லைன் இல்லாத பகுதிகளுக்கு 6000லிட்டர் கொள்ளளவு கொண்ட தனியார் லாரி மற்றும் டிராக்டர்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.5.00லட்சத்திற்கு அங்கீகாரம் கோரப்படுகிறது.

மேற்படி பணியின் அவசரஅவசியம் கருதி, தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று 01.02.2018ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எ | ஒப்பந்ததாரர் பெயர் திரு/திருமதி | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1 | 1.ஜி.பிரபாகரன்<br><br>2. உதயகுமார் | 0.07% மதிப்பீட்டை விட குறைவு<br><br>0.50% மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலகக்குறிப்பு: அங்கீகாரம் வழங்கலாம்.மேற்கண்ட பணிக்காகும் செலவினத்தை குடிநீர்நிதி தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.
ந.க.எண்.42/2018/இ2
தீர்மானஎண்.297 அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

6. இந்நகராட்சி பொறியியல் பிரிவில் பயன்பாட்டில் உள்ள கீழ்க்கண்ட வாகனங்களுக்கு செலுத்தப்பட வேண்டிய சாலைவரி, காப்பீட்டு தொகை, தகுதிச்சான்று, பசுமைவரி மற்றும் சுங்கச்சாவடி கட்டணம் ஆகியவற்றை ஓராண்டிற்கு 2018-19ம் ஆண்டிற்கு செலுத்த ஆகும் தோராய செலவினம் ரூ.2.00லட்சத்திற்கு (ரூபாய் இரண்டு லட்சம் மட்டும்) அங்கீகாரம் கோரப்படுகின்றது.

| வ.எண். | வாகன எண் | பயன்பாட்டு விவரம் |
|---|---|---|
| 1 | TN.23BX3308 | அலுவலக ஈப்பு வாகனம் |
| 2 | TN.23K0018 | அலுவலக ஈப்பு வாகனம் |
| 3 | TN.83Y9506 | அலுவலக ஈப்பு வாகனம் |
| 4 | TN.23U2118 | குடிநீர் லாரி |
| 5 | TN.23W8626 | குடிநீர் லாரி |
| 6 | TN.23Y8707 | குடிநீர் டிராக்டர் |

அலுவலகக்குறிப்பு:
1.அங்கீகரிக்கலாம்.
2.மேற்கண்ட வரிசை எண்.1, 2, 3ல் உள்ள வாகனங்களுக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலும், வரிசை எண்.3,4,5,6 ஆகிய வாகனங்களுக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதி தலைப்பின் கீழ் செலவு செய்யவும் அங்கீகாரம் வழங்கலாம்.
ந.க. எண்: 142/2018/இ2
தீர்மானஎண்.298 அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

7. இந் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தெருவிளக்குகள் பராமரிப்பு பணிக்கு நகராட்சியில் தெருவிளக்கு மின்கம்பியாளர்கள் போதுமானதாக இல்லாததால் வார்டு எண்.01 முதல் 24 வரையுள்ள பகுதிகளுக்கான தெருவிளக்கு பராமரிப்பு பணிகள் தனியார் மூலம் மேற்க்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்படி பராமரிப்பு பணியினை 2018-2019ம் ஆண்டு தனியார் மூலம் மேற்க்கொள்ள ஆகும் தோராய மதிப்பீட்டு தொகை ரு.15.00லட்சத்திற்கு (ருபாய் பதினைந்து லட்சம் மட்டும்) அங்கீகாரம் கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**
அங்கீகரிக்கலாம். மேற்கண்ட செலவினத்தை வருவாய்நிதி தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகாரம் வழங்கலாம்.
ந.க.எண்.141/2018/இ2
தீர்மானஎண்.299 அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

8. இந் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வார்டு எண்.25 முதல் 36 வரையுள்ள பகுதிகளில் தெருவிளக்கு பராமரிப்பு பணிகள் நகராட்சி பணியாளர்கள் மூலம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி பராமரிப்பு பணியினை 2018-2019ம் ஆண்டு மேற்க்கொள்ள தேவையான மின்பொருட்களை கற்பகம் சிறப்பங்காடி வேலூரிலிருந்து வாங்கிக் கொள்ள ஆகும் தோராய மதிப்பீட்டு தொகை ரு.5.00லட்சத்திற்கு (ருபாய் ஐந்து லட்சம் மட்டும்) அங்கீகாரம் கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**
அங்கீகரிக்கலாம். மேற்கண்ட செலவினத்தை வருவாய்நிதி தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகாரம் வழங்கலாம்.
ந.க.எண்.143/2018/இ2
தீர்மானஎண்.300 அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

9. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட சாமியார்மடம் பகுதியில் அமைந்துள்ள 32.75லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தரைமட்ட நீர்த்தேக்க தொட்டியில் இருந்து விநியோகிக்கப்படும் குடிநீரில் அரசு உத்திரவின்படி Sodium Hypochlorite solution உரிய அளவில் கலந்து குடிநீர் விநியோகம் செய்ய வேண்டி உள்ளது. எனவே, Sodium Hypochlorite solution 6 மாத காலத்திற்கு வாங்கி உபயோகப்படுத்த ஆகும் தோராய மதிப்பீட்டுத் தொகை ரூ.9.40லட்சத்திற்கு (ரூபாய் ஒன்பது லட்சத்து நாற்பதாயிரம் மட்டும்) அங்கீகாரம் கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அங்கீகாரம் வழங்கலாம். மேற்குறிப்பிட்டுள்ள பணியினை குடிநீர் நிதி தலைப்பின் கீழ் மேற்க்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.

ந.க.எண். 140/2017/இ2

தீர்மானஎண்.301 அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

10. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட எம்.சி.ரோடு கிழக்கு பகுதியில் உள்ள ஜலால்பள்ளம் பகுதியில் சேரும் மழைநீரானது வெளியேற வழியில்லாமல் அப்பகுதியிலேயே தேங்கி விடுவதால் பொது சுகாதார சீர்கேடு ஏற்படும் நிலை உள்ளது. அப்பகுதி மழைநீரினை வெளியேற்றும் வகையில் மஸ்ருல் உலூம் மேல்நிலைப்பள்ளியின் பின்புறம் (கிழக்கு) பகுதியில் உள்ள மாணவர்களின் விளையாட்டுத் திடலின் ஒரு பகுதியில் சுமார் 120மீ நீளத்தில் அப்பள்ளியின் நிர்வாகத்தினரின் ஒப்புதலுடன் 2005-ம் ஆண்டு வாக்கில் திறந்தவெளி மழைநீர் வடிகால் அமைக்கப்பட்டதினை ஜே.சி.பி.கொண்டு சீர் செய்யும்போது அம்மழைநீர் வடிகாலின் பக்கச்சுவர்கள் விரிசல் விட்டு உடைந்துள்ளதை அப்புறப்படுத்திவிட்டு இரு பக்கச் சுவர்களையும், சராசரியாக 0.75மீ உயரத்திற்கு உயர்த்தி மேல் பகுதியில் ஆர்.சி.சி.மூடு சிலாப் கொண்டு மூடியுடன் கூடிய மழைநீர் வடிகால்வாய் பணி மேற்க்கொள்ளவும் அதற்காகும் மதிப்பீடு தொகை ரூ.8.00லட்சத்திற்கும் (ரூபாய் எட்டு லட்சம் மட்டும்) அங்கீகாரம் கோரப்படுகின்றது.

அலுவலகக் குறிப்பு : அங்கீகாரம் வழங்கலாம். மேற்குறிப்பிட்டுள்ள பணியினை வருவாய்நிதி தலைப்பின் கீழ் மேற்க்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.

ந.க.எண்.67/2018/இ1

தீர்மானஎண்.302 அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

11. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளான பாவேந்தர்தெரு, புதுமண்டி தெரு, வி.ஏ.கரீம்ரோடு, கஸ்பா.பி.பிரதான சாலை, அழகாபுரி மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வளாகம் அருகில், எஸ்.கே.ரோடு ஓடை அருகில், நெசவுக்கார 3வது தெரு எதிர்ப்புறம் மற்றும் கஸ்பா.அ.பிரதான சாலையில் உள்ள அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி அருகில் ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள பொதுக கழிப்பறைகளில் ஏற்பட்டுள்ள பழுதுகளை நீக்கி பராமரிப்பு பணிகள் மேற்க்கொள்ளவும் அதற்காகும் மதிப்பீடு தொகை ரூ.9.75லட்சத்திற்கும் (ரூபாய் ஒன்பது லட்சத்து எழுபத்தி ஐந்தாயிரம் மட்டும்) அங்கீகாரம் கோரப்படுகின்றது.

அலுவலகக் குறிப்பு : அங்கீகாரம் வழங்கலாம். மேற்குறிப்பிட்டுள்ள பணியினை வருவாய்நிதி தலைப்பின் கீழ் மேற்க்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.

ந.க.எண்.58/2018/இ1

தீர்மானஎண்.303 அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

12. இந்நகராட்சிக்கு சொந்தமான கஸ்பா.அ. நகராட்சி துவக்கப்பள்ளியில் உள்ள வகுப்பறைகளில் பழுதடைந்து எறிந்து போன 40 வாட்ஸ் குழல்விளக்குகள், மின்விசிறிகள் ஆகியவற்றை அப்புறப்படுத்திவிட்டு புதியதாகவும், கூடுதலாகவும் குழல்விளக்குகள் மற்றும் மின்விசிறிகளை பொருத்தவும், ஏற்கனவே உள்ள தலைவர்களின் பழைய வண்ணப்படங்கள் பராமரிப்பில் உள்ளதால், அவற்றை புதியதாக வர்ணம் தீட்டி பொருத்தவும், அதற்காகும் மதிப்பீடு தொகை ரூ.3.00லட்சத்திற்கும் (ரூபாய் மூன்று லட்சம் மட்டும்) அங்கீகாரம் கோரப்படுகின்றது.

அலுவலகக் குறிப்பு : அங்கீகாரம் வழங்கலாம். மேற்குறிப்பிட்டுள்ள பணியினை கல்விநிதி தலைப்பின் கீழ் மேற்க்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.
ந.க.எண்.68/2018/இ1
தீர்மானஎண்.304 அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

ஓம்/- எல்.குமார்.பி.இ.
தனி அலுவலர்,
ஆம்பூர் நகராட்சி.

/உண்மைநகல்/

தனி அலுவலர்,
ஆம்பூர் நகராட்சி.